# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**JUNE 2024**



## கர்த்தருக்கு பயப்படுவோரை ஆசீர்வதிக்கிறார்


**C.S.I. TAMIL CHURCH SHARJAH**

The United Arab Emirates,

Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com



For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 5 |
| திருமறை தியானம் | 7 |
| பெண்கள் பகுதி | 10 |
| WISDOM FROM ABOVE | 12 |
| அறிந்து கொள்வோம் | 14 |
| இனிய இல்லறம் | 15 |
| Church History | 17 |
| திருமறையை தெரிந்துகொள்வோம் | 19 |
| Kids Corner | 20 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 22 |
| Daily Bible Reading | 24 |
| ஆராதனை தியானப் பொருள் | 25 |

From the
# Presbyter's Desk



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

மீட்பரும் இரட்சகருமாகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

பிதாவாகிய கடவுளாலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த இரண்டு ஆண்டு காலமாக உங்கள் மத்தியில் மகிழ்ச்சியோடு இறைப்பணியாற்ற கடவுள் அருள் புரிந்தார். ஆண்டவருக்கு கணமும் ஸ்தோத்திரத்தையும் செலுத்துகிறேன். கடந்த இரண்டு ஆண்டு காலம் முழுவதும் ஊழிய பாதையில் சிறப்பாக ஒத்துழைப்பு நல்கிய நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் அனைத்து ஊழிய பொறுப்பாளர்களுக்கும் என்னுடைய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கடந்த மே மாதம் 19-ம் தேதி நடைபெற்ற நமது திருச்சபையின் வருடாந்திர பொது குழு கூட்டத்தில் ஜெபத்துடன் கலந்துகொண்டு திருச்சபையின் வளர்ச்சி கரியங்களை குறித்த மேலான ஆலோசனையும், முழுமையான ஒத்துழைப்பையும் கொடுத்தீர்கள். உங்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். ஆதி திருச்சபை அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிடுகுதலிலும், ஜெபத்திலும் உறுதியாய் தரித்திருந்தது போல நாமும் சபையின் நோக்கத்தை அறிந்து நம்மை நாம் அர்ப்பணித்து செயல்படுவோம். கர்த்தர் நம் சபையை உயர்த்தி சாட்சியான சபையாக தொடர்ந்து வழி நடத்துவார்.

மே 26-ம் தேதி நடைபெற்ற பெண்கள் ஞாயிறு ஆராதனையில் நம்முடைய திருச்சபையின் பெண்கள் ஐக்கிய சங்கத்தார் மிக சிறப்பாக ஆராதனையை நடத்தினார்கள் மற்றும் குறு நாடகம், சிறப்பு பாடல் மூலமாக வாழ்வின் எதார்த்தத்தை எடுத்துக் கூறி, எவ்வாறு நாம் வாழ்வில் செயல்பட வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார்கள். சிறப்பான வழிபாட்டை நடத்தின பெண்கள் ஐக்கிய சங்கத்தாருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அன்றைய நாளிலும் C.S.I.TAMIL PARISH DUBAI ஆலயத்திலிருந்து நம் மத்தியிலே

கடந்து வந்து ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்ட Mrs.Sheela Rajkumar அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதம் 23-ஆம் தேதி நம்முடைய ஆலய தினத்தை (CHURCH DAY) நாம் அனுசரிக்க இருக்கிறோம். அனைவரும் அந்த நாளிலே நம்முடைய ஆலயத்தின் சிறப்பு ஆராதனையில் பங்கு பெற்று ஆண்டவருடைய நாமத்தை மகிமைப்படுத்தும் படியாக கேட்டுக்கொள்கிறேன்.

கர்த்தர் தாமே இந்த புதிய மாதத்திலும் நம்மோடு இருந்து நம்மை வழி நடத்துவாராக.

இறைபணியில்
அருள்திரு.J.ஜான் ஜெபலின் ஜோஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com

# செயலர் மடல்

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே, திருச்சபையின் அங்கங்களாகிய உங்களனைவருக்கும் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சேனைகளின் கர்த்தர் நம்மோடிருக்கிறார்; யாக்கோபின் தேவன் நமக்கு உயர்ந்த அடைக்கலமானவர். சங்கீதம் 46:7 இந்த கோடைக் காலத்தில் UAE தேசத்திலும், நமது தாயகத்திலும் வெப்பத்தின் தாக்கத்திலிருந்து நம்மையும், நமது குடுபத்தின் பிள்ளைகளையும், சேனைகளின் கர்த்தர் தாமே நம்மோடிருந்து, நமக்கு உயர்ந்த அடைக்கலமாய் பாதுகாத்து வருகிறார். அதற்காக நாம் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுப்போம்.

மே மாதம் 19-ம் தேதியன்று நடைபெற்ற வருடாந்திரப் பொதுக் குழுக் கூட்டம் சிறப்பாக நடைபெற தங்களது ஒத்துழைப்பையும், ஆதரவையும் அளித்தத் திருச்சபை மக்களுக்கு நிர்வாகக் குழுவின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், அந்தக் கூட்டத்தில் பொறுமையுடன் காத்திருந்து தங்களது ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கியமைக்காகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மே மாதம் 26-ம் தேதியன்று நடபெற்ற பெண்கள் ஞாயிறு ஆராதனையை ஒரு அர்த்தமுள்ள ஆராதனையாக மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்த ஆயரம்மா மற்றும் அவர்களோடு இணைந்து ஆராதனைமுறைமை, சிறப்பு பாடல், மற்றும் குரு நாடகம் மூலம் தேவனுடைய வல்லமையுள்ள நாமத்தை மகிமைப்படுத்திய நமது திருச்சபையின் சகோதரிகள் யாவருக்கும் நிர்வாகக் குழுவின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்றைய நாளிலும் நமது அழைப்பை ஏற்று ஆண்டவருடைய வார்த்தையை நம் மத்தியில் பகிர்ந்து கொண்ட அன்பு சகோதரி திருமதி. ஷீலா ராஜ்குமார் (CSI Tamil Parish Dubai) அவர்களுக்கும் திருச்சபையின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், அன்றைய நாளிலும் நமது சிறுவர் பாடசாலை பிள்ளைகள் தங்கள் தாய்மார்களை கனம் பண்ணும்படியாக அவர்களுக்கு தங்கள் கைப்பட உருவாக்கிய அன்னையர் தின வாழ்த்து அட்டைகளையும், மலர்களையும் பரிசாகக் கொடுத்தது அனைவரையும் நெகிழவைத்தது. அதை முன்னின்று நடத்திய இயக்குனர் மற்றும் ஆசிரியர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

திருமறையோடு பயணிப்போம் 2024 என்ற அடிப்படையில் லெந்து காலங்களில் வேத வினாக்களுக்கு பதில் அளித்த சகோதரிகள் மற்றும் ஆண்களுக்கான மனன வசனப் போட்டியில் பரிசுகள் வென்ற சகோதரர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தேவன் தாமே நம்மனைவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக.

ஆமென்.

திருச்சபை ஊழியத்தில்
**ஸ்டீபன் குணசேகர்**
☎ +971 58 5896 975



# கர்த்தருக்கு பயப்படுவோரை ஆசீர்வதிக்கிறார்

உங்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்கிறேன்.

“கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரையும், சிறியோரையும் ஆசீர்வதிப்பார்.” சங்கீதம் 115:13

“பயம்” பலநிலைகளில் காணப்படுகின்றது. சிலருக்குப் புதிய சூழ்நிலை களைக் காணும்போது பயம் ஏற்படுகின்றது. சிலருக்கு எதிர்காலத்தைப் பற்றிய பயம் அவர்களை வாட்டி வதைக்கிறது. சிலருக்கு வியாதியைப் பற்றியோ, பிள்ளைகளைப் பற்றியோ பயம் காணப்படுகின்றது. மேலும் சிலருக்கு பூச்சி, மற்றும் சில விலங்குகளைக் காணும்போது, இருளைக் காணும்போதோ பயம் உண்டாகிறது. ஆனால் கர்த்தருக்குப் பயப்படுகின்ற பயம் மேலே கூறப்பட்டுள்ள பயத்தைப் போல உணர்ச்சியை அல்ல, மாறாக உணர்வாக காணப்படுகின்றது.

தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி.8:13) என்று திருமறை வசனம் கூறுகின்றது. நன்மை, தீமையை அறிந்திருக்கிற நாம் தீமையை வெறுத்து, அதை விட்டு விலகுவதே கர்த்தருக்குப் பயப்படுகிற பயம். நம்மிடம் கடவுள் பயம் காணப்பட வேண்டும். கர்த்தர் தமக்குப் பயப்படுவோரை எவ்விதமாய் ஆசீர்வதிக்கிறார் என்பதைக் குறித்துத் தியானிப்போம்.

## 1.ஆயுளைக் கொடுக்கிறார் :

கர்த்தருக்குப் பயப்படுதல் ஆயிசு நாட்களைப் பெறுகப் பண்ணும் (நீதி. 10:27)

தீமையை வெறுத்து கர்த்தருக்குப் பயந்து வாழும் போது, கர்த்தர் ஆயுளை நீடிக்கப்பண்ணுகிறார். கடவுளுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுரகிறவனுமான யோபுவின் வாழ்க்கையில், கர்த்தர் யோபுவையும், அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைத்திருந்தார் (யோபு 1:10 ) என்று சாத்தான் கூறுவதைப் பார்க்கிறோம். கர்த்தருக்குப் பயந்து வாழும் போது, கர்த்தரே வேலியடைத்து நம்மைப் பாதுகாக்கிறார். கர்த்தர் வேலியடைத்தபடியால் சாத்தானால் யோபுவை நெருங்க முடியவில்லை. ஆபிரகாமின் வாழ்வில் கர்த்தர் ஆபிரகாமைச் சோதித்தபோது, "நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக்கொடுத்த படியினால் நீ தேவனுக்கு பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்"; (ஆதி.22:12) என்று சொல்லி, ஈசாக்கிற்குப் பதிலாக ஓர் ஆட்டுக்கடாவை காண்பித்துத் தகனபலியிடச் சொன்னார். ஆபிரகாம் கடவுளுக்கு பயந்து வாழ்ந்தபடியால், ஈசாக்கின் ஆயுசு நாட்களைக் கர்த்தர் நீடித்தார்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாமும் கர்த்தருக்கு பயந்து நடக்கும்போது, நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் கர்த்தர் ஆயுளைப் பெறுகப்பண்ணுகிறார்.

## 2.ஆஸ்தியைக் கொடுக்கிறார் :

அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர். அவருடைய சம்பத்து தேசத்தில் பெறுகின்று (யோபு 1:10)

யோபு மிகப்பெரிய செல்வந்தனாக வாழ்ந்ததற்குக் காரணம் யோபு

கடவுளுக்கு பயந்து வாழ்ந்தார். அதனால் கர்த்தர் யோபுவை ஆசீர்வதித்தார். நமது வாழ்வில் கர்த்தருக்குப் பயந்து, தீமையை வெறுத்து வாழும்போது, கர்த்தர் தமது குடும்ப வாழ்வை ஆசீர்வதிக்கிறார். சங்கீதம் 128ஐ தியானிக்கும் போது, உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய் என கர்த்தர் கணவனின் உழைப்பை ஆசீர்வதிக்கிறார். மனைவி உபசரிக்கும் குணத்தைக் கொண்டவளாக, கனிதரும் திராட்சைக் கொடியைப் போல் இருப்பாள். பிள்ளைகள் உபயோகமான பிள்ளைகளாக ஒலிவமரக் கன்றுகளைப் போல் இருப்பார்கள் என்று ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கர்த்தருக்கு பயந்து நடக்கும் போது, கணவன், மனைவி பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் வாழ்வார்கள் என்று திருமுறைவசனம் கூறுகின்றது.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! நாமும் கர்த்தருக்குப் பயந்து நடக்கும் போது, நம்முடைய குடும்ப வாழ்விலும் ஆசீர்வாதத்தைக் கட்டளையிடுகிறார். கர்த்தர் நமது கைகளில் பிரயாசத்தை ஆசீர்வதிக்கிறார். தேவனுக்கு அஞ்சி அவருக்கு முன்பாக பயந்து இருப்பவர்களே நன்றாக இருப்பார்கள் (பிர. 8:12) என்ற வசனத்தின்படி, கர்த்தருக்குப் பயந்து நடக்கிற குடும்பத்தைக் கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். அதன் மூலமாக கர்த்தர் நமக்குத் தேவையான ஆஸ்திகளையும், சம்பத்துகளையும், ஆயுசு நாட்களையும் தந்து நம்மை ஆசீர்வதிக்கிறார்.

கடவுள் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# மோசேயின் மனைவி சிபோராள்

மோசே பார்வோனிடத்திலிருந்து தப்பி, மீதியான் தேசத்தை போய் சேர்ந்தான். மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த ரெகுவேல் என்ற எத்திரோ, தன்னுடைய மகள் சிப்போராளை மோசைக்கு மனைவியாக கொடுத்தார். அவள் மோசேக்கு கெர்சோம், எலியேசர் என்ற இரண்டு குமாரரை பெற்றாள். முச்செடியின் நடுவிலிருந்து தேவன் மோசையோடு பேசினார். அக்கினி ஜுவாலையிலிருந்து எரிந்தும் முச்செடி வெந்து போகாமல் இருந்தது. அந்த அற்புத காட்சியை பார்க்க அழைத்து வர எகிப்திற்கு மோசையை அனுப்பினார். மோசே தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும் கழுதையின் மேல் ஏற்றிக்கொண்டு, எகிப்து தேசத்திற்கு புறப்பட்டான். வழியிலே தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு, அவனை கொல்லப் பார்த்தார். அப்பொழுது சிப்போராள் கருக்கான ஒரு கல்லை எடுத்து, தன் புத்திரனுடைய நுனித்தோலை அறுத்து, அவனை விருத்தசேதனம் பண்ணினாள். அப்பொழுது அவர் மோசையை விட்டு விலகினார். சிபோராள் மிகவும் விரைந்து செயல்பட்டபடியால் மோசேயின் உயிர் அன்று காக்கப்பட்டது. உங்கள் நுனித்தோலின் மாம்சத்தை

விருத்தசேதனம் பண்ணக்கடவீர்கள். அது எனக்கும் உங்களுக்குமுள்ள உடன்படிக்கைக்கு அடையாளமாயிருக்கும். நுனித்தோலுள்ள ஆண் பிள்ளை இருந்தால் அந்த ஆத்துமா தன் ஜனத்தின் இராதபடிக்கு அறுப்புண்டு போவான் என்று தேவன் ஆபிரகாமிடத்தில் சொல்லியிருந்தார். குழந்தை பிறந்த எட்டாம் நாளில் செய்ய வேண்டிய இந்த காரியம் செய்யப்படாதது, பெற்றோர் செய்த தவறு. தேவனுடைய கட்டளையை அறிந்திருந்த சிப்போரள், தவறை உணர்ந்து உடனே சரிப்படுத்தினாள். தேவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிவது மிகவும் முக்கியமானது. கீழ்ப்படியாமை அழிவை கொண்டு வரும். அவருடைய மன்னிப்பு உடனடியானது. சிப்போரா தவறை உணர்ந்து, அதை சரிப்படுத்தின உடனேயே தேவன் மனம் மாறினார், மன்னித்தார். தேவனுடைய மன்னிப்பு மிகவும் சீக்கிரமாய் வெளிப்படும். சிப்போராளைப் போல நாமும் நம்முடைய வாழ்க்கையின் தவறுகளை உணர்ந்து, அவற்றை திருத்தி கொண்டு தேவ மன்னிப்பை பெற்று வாழ நாம் கற்றுக் கொள்வோம். கர்த்தர் தாமே இந்த வார்த்தைகளை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

**J.ஜெனு ஜெபலின்**

ஆயர் அம்மா



# WISDOM FROM ABOVE

All of us yearn for wisdom like Solomon we are astonished by his deeds. He obtained his wisdom from God "Do you want to be counted wise, to build a reputation for wisdom? Here's what you do: Live well, live wisely, live humbly. It's the way you live, not the way you talk, that counts … Real wisdom, God's wisdom, begins with a holy life and is characterized by getting along with others. It is gentle and reasonable, overflowing with mercy and blessings, it must not be lukewarm.

To develop a healthy community that lives right with God and enjoy its results we have to work hard in getting along with each other, treating each other with dignity and honor." James 3:13, 17-18, it’s easy to tell when we are operating in God's wisdom or in the wisdom that comes from our own selfish ambition, pride or the enemy's influence. Been irritated lately? Frustrated when people

don't agree with you? When we operate in God's wisdom – it's easy to get along with people. Look at the characteristics of godly wisdom: there is a desire to get along with others rather than the desire to look for a fight.

But the wisdom that is from above is first pure, then peaceable, gentle, willing to yield, full of mercy and good fruits, without partiality and without hypocrisy." Wisdom from "below" is hot-tempered, rude, mean-spirited, selfish, hypocritical, or unfair. "Mean-spirited ambition isn't wisdom. Boasting that you are wise isn't wisdom. Twisting the truth to make yourselves sound wise isn't wisdom. It's the furthest thing from wisdom - it's animal cunning, devilish conniving. Whenever you're trying to look better than others or get the better of others, things fall apart and everyone ends up at the others' throats." (James 3:14-16)

In this day and age, it's obvious that we need God's wisdom more than ever. May we seek Him and His wisdom in a greater way and may the fruit of the wisdom that comes from above be evident among us!

Contributed By

*Nancy Augustine*



# மிஷனெரி
# JESSIMAN BRAND

ஜெசிமன் பிராண்ட் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்தவர் இந்தியாவில் கொல்லிமலைப் பகுதியில் ஊழியம் செய்தார். கொல்லிமலை இது ஒரு ஆட்கொல்லி மலை. 1919-ஆம் ஆண்டு கொல்லிமலையில் விஷக்காய்ச்சல் எங்கும் பரவியது. பலர் நோயின் பிடிக்குள் சிக்கி, தங்கள் உடல் பெலத்தை இழந்து பரிதாபமாகச் செத்து மடிந்தனர்.

இவ்விதமான காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒருகலசம் தண்ணீர்கூட யாரும் கொடுக்க முன் வரவில்லை. காரணம், அந்நோய் தங்களை தொற்றிவிடும் என்ற பயமாகும். ஜெசிமண்ட் தம்பதியினர் அந்நோய் தாக்கியவர்களைத் தேடி கண்டுபிடித்து தங்கள் வீட்டில் அடைக்கலம் கொடுத்து, அரிசி கஞ்சியை ஆயத்தப்படுத்தி அவர்களுக்கு உணவுகளைப் பரிமாறினார். மிக ஆபத்தான காட்டு மிருகங்களும் நாட்டு மிருகங்களும் நிறைந்த பகுதி. இந்து மத பூசாரிகளும் மந்திரவாதிகளும் தங்கள் கொள்கைகளையும், தந்திரங்களையும் மக்களிடையே திணித்துக் கொண்டு தங்களையும் மக்களையும் முட்டாளாக்கிக் கொண்டிருந்தனர். எப்படியாகிலும் கிறிஸ்துவின் அன்பை அறிவிக்க உந்தப்பட்ட ஜெசிமன் அம்மக்களுக்காக மருத்துவ உதவியுடன் நற்செய்தியை அறிவித்தார். பள்ளி ஒன்றையும் நிறுவினார். கட்டிடம் கட்டும் முறைகளையும் பயிர்களை விளையச் செய்யும் முறைகளையும், எளிய விதங்களில் கற்றுக் கொடுத்தார். மக்கள் அவரின் அனைத்து உதவிகளையும் ஏற்றுக் கொண்டனரே தவிர அவர் போதித்த இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள முன் வரவில்லை. ஆனாலும் அவர் சோர்வில்லாமல் உழைத்தார். ஒரே வருடத்தில் 90 கிராமங்களுக்குச் சென்று 4000 பிரசங்கங்களை செய்தார். 25000 மக்களுக்கு மருத்துவ உதவிகளை செய்தார். ஒன்றன்பின் ஒன்றாக மக்கள் நற்செய்தியை ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தனர். ஜெசிமன் அடைந்த ஆனந்தத்திற்கு அளவே இல்லை. இந்த ஆனந்தம் சீக்கிரமே கடந்து சென்றது. அங்கு பரவிய கருப்பு நீர் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு தான் பணி செய்த கொல்லிமலையிலேயே 1928-ஆம் ஆண்டு மரித்து கோதுமை மணியனார். இவர் ஈவிலின் பிராண்ட் என்பவரின் கணவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# பொறுப்பான பெற்றோர்

**“என் பிள்ளைகள் சத்தியத்தில் நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற மகிழ்ச்சியிலும் அதிகமான மகிழ்ச்சி எனக்கு (வேறொன்றும்) இல்லை** (3 யோவான்; வசனம் 4).”

பொறுப்புள்ள பெற்றோராயிராதவர்கள், ஒழுக்கமற்ற பிள்ளைகள் உருவாவதற்குப் பொறுப்பாகிறார்கள். (Faulty Parenting breeds faulty children).

குழந்தைகள், இறைவன் உங்கள் கரங்களில் ஈந்துள்ள “அருங் களிமண்” போன்றவர்கள். ஒரு குயவனைப் போல், அல்லது ஒரு கலைஞனைப் போல் அவர்களை எவ்வடிவிலும் வடிக்கலாம். பெற்றோர்களின் திறமைக்கேற்பப் பிள்ளைகள் உருப்பெறுகிறார்கள்.

ஜனாதிபதி, ஜாண் எஃப் கென்னடி, “தவறாகக் கற்பிக்கப்படும் குழந்தை உதவாக்கரையாகிவிடும்” என்று கூறுவதைக் கவனத்தில் கொள்ளுங்கள். (A child miseducated is a child lost-John F. Kennedy.)

டேவிட் வில்கர்சன் (David Wilkerson) என்ற சமூக சிந்தனையாளர் கூறும் கூற்றைக் கேளுங்களேன்: “நல்ல பெற்றோர்க ளெல்லாம் எப்பொழுதும் நல்ல குழந்தைகளைப் பெற்றுவிடுவார்கள் என்று கூறிவிட முடியாது.

குழந்தைளை வளர்ப்பதில் பொறுப்பும், ஈடுபாடும் கொண்ட தந்தையாராலுமே, தாயாராலும் பிள்ளைகளில் நற்குணங்களையும், நற்பண்புகளையும், நல்லொழுக்கங்களையும் மேலோங்கச் செய்ய வாய்ப்புள்ளது. பெற்றோர்களின் ஒவ்வொரு செயலும் வார்த்தையும் குழந்தையின் குணத்தை நெய்யும் நூலிழைகள் போன்றவைகள். அவ்வாறு நெய்யப்பட்ட குணநலங்களே, அக்குழந்தை சமுதாயம் என்னும் கூட்டமைப்பில் தன்னை எப்படி இணைத்துக் கொள்கிறது என்பதைத் தீர்மானிப்பதாக இருக்கிறது."

## பெற்றோராயிருத்தல் (Parenting)

குழந்தை எளிதானதல்ல. வளர்ச்சி, ஆவிக்குரிய வளர்ச்சி, ஒழுக்கம், சாமர்த்தியம் (Talent) அனைத்திலும் பெற்றோர்களுக்குப் பங்குண்டு.

பெற்றோரா யிருக்கும் யாரும் எங்கும் பெரும்பாலான பெற்றோர்கள் முட்டி, மோதிக் கற்றுக்கொள்ளும் வழியையே பின்பற்றுகின்றனர். (Many parents Trial Error வெற்றியை ஈட்டுகின்றனர். பலர் பல குளறுபடிகள் செய்து தோல்வியைத் தழுவுகின்றனர்.

பெற்றோராய் கொள்ளும் முறைமையைக் குறித்த தெளிவான கண்ணோட்டம் பலரிடம் இல்லை.

பெரும்பாலும் நம் பெற்றோர்களாயிருந்தார்களோ, அவ்விதப் பெற்றோர்களாகவே Parent were parented).

நாம் எப்படிப்பட்ட ஒழுக்கத்தில் வளர்க்கப்பட்டோமோ ஒழுக்க வழிகளிலேயே பிள்ளைகளை வளர்க்க முனைகிறோம். (We discipline the children, as we were disciplined).

நம் பெற்றோர்களின் நிறை குறைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, குறைகளை நீக்கி, நிறைவான பெற்றோர்களாக நாம் விளங்குவதில்லை. நமது பெற்றோர்களால் நம்மில் ஏற்பட்ட பாதிப்பைப் பிள்ளைகளுக்குக் கடத்துகிறோம். (We pass on conceptions down to our generation).

நீங்கள் பொறுப்புள்ள பெற்றோராய் வெற்றிகரமாகப் பணியாற்றியதைக் கணிக்க உங்கள் பிள்ளைகள்தான் அளவுகோல்கள். (Your children are the measure of your sucess of your parenting).

# தரங்கம்பாடிக்கு லூத்தரன் மிஷனெரிமாரின் வருகை



### திருமறை மொழியாக்கம்

பள்ளிப் பிள்ளைகளுக்குத் தேவையான நூல்களைக் காட்டிலும் மதம் மாறிய கிறிஸ்தவர்களுக்குத் தமிழாக்கம் செய்யப்பட்ட திருமறை நூலே அத்தியந்த அவசரமாய்த் தேவைப்படுகின்றது என்பதை சீகன்பால்க் உணர்ந்தார். எம்மொழியையும் எளிதில் கற்றுக்கொள்ளும் ஆற்றல் மிக்கவர். இவர் தாங்கம்பாடிக்கு வந்து ஈராண்டுகள் நிறைவு பெறுவதற்கு முன்னமே புதிய ஏற்பாட்டைத் தமிழாக்கம் செய்யத் தொடங்கினார். இதுவரை திருமறையை இந்திய மொழியில் இவ்வாறு மொழியாக்கம் செய்ய யாரும் முன் வந்ததில்லை.

அவர் ஜெபத்துடன் மொழியாக்கப் பணியைத் தொடங்கினார். ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளுக்குள்ளாக, இப்பணி நிறைவெய்திடக் கடவுளிடம் வேண்டிக்கொண்டார். மொழியாக்கப் பணி எளிதானது அல்ல. உரைநடை பழக்கத்தில் இல்லாத காலம் அக்காலக்கட்டத்தில் தமிழிலக்கியங்கள் செய்யுள் வடிவத்தில் எழுதப்பட்டு வந்தன. எனவே திருமறையை மொழியாக்கம் செய்ய வேறு ஒரு உத்தியைக் கையாண்டார். கிறிஸ்தவச் சிந்தனைகளையும், திருமுழுக்கு போன்ற வார்த்தைகளையும் விளக்கக்கூடிய சரியான தமிழ்ச் சொற்கள் வழக்கத்தில் இல்லை. இரண்டரை ஆண்டுகள் மிகவும் பாடுபட்டு

உழைத்தார். கடைசியாக 1711 மார்ச்சு மாதம் 31-ஆம் நாள் மொழியாக்கப் பணி நிறைவடைந்தது. ஆயினும் 1715-ல் தான், புதிய ஏற்பாடு தமிழில் அச்சிடப்பட்டது.

புதிய ஏற்பாட்டை மொழியாக்கம் செய்து முடித்த உடனே, பழைய ஏற்பாட்டையும் மொழியாக்கம் செய்ய சீகன்பால்க் முயன்றார். மரணமடைவதற்கு முன் ரூத் நூல் வரை மொழியாக்கம் செய்துவிட்டார். அவர் தொடங்கிய பணியை மற்றவர்கள் நிறைவு செய்தனர்.

## புராட்டஸ்டண்ட் திருச்சபையின் தோற்றம்

மிஷனெரிமார், இந்தியா வந்த பத்து மாதங்களுக்குள்ளாக, டேனிஷ் மக்களிடம் வேலை செய்த ஐந்து போர்ச்சுக்கீசியருக்குத் திருமுழுக்கு அளித்துவிட்டனர். இது குறித்து ஐரோப்பியர்கள் மகிழ்ச்சியடையவில்லை. தங்களுடைய ஆலயத்திற்கு வேலைக்காரர்களும் தொழுகைக்கு வருவதை அவர்கள் விரும்பவில்லை. எனவே சீகன்பால்கும் புளூட்சோவும் சேர்ந்து எருசலேம் என்ற சிறிய ஆலயத்தைக் கட்டினர். இந்த ஆலயம் கட்டுவதற்குத் தங்கள் சொந்த சம்பளத்திலிருந்து செலவு செய்தனர். சிறிது காலத்திற்குள் அச்சிறிய ஆலயம் இவர்களுடைய பணியின் பிரதான இடமாக மாறியது. ஆலயம் திறக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள்ளாக, ஒன்பது இந்துக்கள் திருமுழுக்குப் பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக, புராட்டஸ்டண்ட் திருச்சபை

எண்ணிக்கை மிகவும் குறைவாகத்தான் இருந்தது. நேகமாக வளர்ச்சியடையவில்லை. வெறும் எண்ணிக்கையில் மாத்திரம் சபை விரும்பாமல் மதம் மாறுவோர் உண்மையான மனமாற்றம் அடைவதையே இம்மிஷனெரிமார் விரும்பினர், சிகன்பால்குக்குத் தமிழ் கற்பித்த தமிழ்ப் புலவரின் மகன் இவரிடம் முதல் முதல் திருமுழுக்குப் பெற்றவர்களில் ஒருவர். இவர் செய்யுள் இயற்றும் ஆற்றல் மிக்க ஆசிரியர், இவர் நற்செய்தி நூல்களில் எழுதப்பட்டுள்ள நிகழ்ச்சிகளைச் செய்யுள் வடிவில் எழுதி, இசையுடன் பட சிறுவர்களுக்குக் கற்பித்தார். திருமுழுக்குப் பெற்ற இவ்வாசிரியர் துன்பத்திற்குள்ளானார். இவருக்கு விஷம் கொடுத்துக் கொல்ல முயன்றனர் என்று சொல்வாரும் உண்டு, சிறிது காலம் வரை தாங்கம்பாடிக்கு வெளியே சென்று மறைந்து வாழ்ந்தபின், திரும்பி வந்து, தமது ஆசிரியப் பணியைத் தொடர்ந்தார்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

சங்கீதம் 1-10

1. காற்றைப் போல் பறப்பவன் யார்?
2. யார் பாக்கியவான்?
3. எப்படி கர்த்தரை சேவிக்க வேண்டும்?
4. தீர்மானத்தின் விவரம் என்ன?
5. தாவீது ராஜா கர்த்தர் எப்படிப்பட்ட சந்தோஷத்தை தன் இருதயத்திலே தந்ததாக சொல்கிறார்?
6. நீங்கள் கோபங்கொண்டாலும், பாவஞ்செய்யாதிருங்கள், வேறு என்ன செய்யச் சொல்கிறார்?
7. தேவனிடத்தில் எது சேர்வதில்லை?
8. உம்மை நம்புகிறவர்கள் எப்படியிருப்பார்கள்?
9. தேவனை துதிப்பவன் எங்கே இருப்பதில்லை?
10. எதை அக்கினி அம்புகளாக்கினார்?
11. யாருக்கு விரோதமாக பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று ஆலோசனை பண்ணினார்கள்?
12. பூமி எங்கும் எது மேன்மையுள்ளதாயிருக்கிறது?
13. யார் நரகத்தில் தள்ளப்படுவார்கள்?
14. தம்முடைய சிங்காசனத்தை எதற்குக் கர்த்தர் ஆயத்தம் பண்ணினார்?
15. தன்னைத்தான் போற்றி கர்த்தரை அசட்டைபண்ணினவன் யார்?

கடந்த மே மாதம் கேள்விகளுக்கு பதிலளித்த அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Sylvia Sekar
2. Mrs.Rajini Julius
3. Mrs.Stella Jashwanth
4. Mrs.Thangamani Anbalagan
5. Mrs.Baby Jesudass
6. Mrs.Kavitha Johnson
7. Mrs.Ruby Jeyaseelan
8. Mrs.Benisha Christabel
9. Mrs.Rubavathi
10. Mrs.Selina Stephen
11. Mrs.Sheela Hendry
12. Mrs.Merlin Jabahar

**Children's Corner Colouring**

1. Andrea Elizabeth
2. S.Sanhedrin

# KIDS CORNER

## Road to Resurrection

Ever wondered what Holy Week is about? Here's a quick guide for you to follow during Holy Week. Read the Bible passage with your family. Then, enjoy doing a fun activity together.

### PALM SUNDAY
**Matthew 21:1-11**

Palm Sunday is celebrated to remember the day Jesus entered Jerusalem. The crowds waived palm branches to welcome Him.

Take a palm leaf and fold it into a cross to remind you of Jesus' sacrifice on the cross.

### MAUNDY THURSDAY
**John 13:1-17**

During the last supper with His disciples, Jesus washed His disciples' feet. He did this to give us an example of how we should be - serving one another.

Gather your family, a towel and a basin with water. Take turns washing each others' feet to remind you of the Last Supper.

### GOOD FRIDAY
**Matthew 27:32-56**

Jesus loves us so much. He sacrificed His life on the cross so that we could be saved from the punishment for our sins.

Make heart sandwiches for your family to remind you of Jesus' love.



### EASTER SUNDAY
**Matthew 28:1-10**


On the third day, Jesus rose from the grave. He is alive today! We celebrate Easter to remember Jesus' resurrection.


Rock and Roll - the stone was rolled away! Let's celebrate by praising God with a fun song.



# Coloring Corner

Color the picture by using the correct colored crayon for each numbered space.



The tomb is empty. The Bible says, "Jesus is risen from the dead." (See Matthew 28:7). Draw a circle around JESUS' name every place you find it in this puzzle.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| J | E | S | U | S | R | J |
| E | J | E | S | U | S | E |
| S | K | J | E | S | U | S |
| U | B | V | U | E | P | U |
| S | U | S | E | J | C | S |

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.
050 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st June**
MRS AROKIA MARY A.
MRS RAMYA S.
**2nd June**
MR JOTHI RAJ DANIEAL
**3rd June**
MASTER GOVINDHA RAJ.J
MASTER RUSHILL RON
MR JASHWANTH RAJESH KUMAR
**5th June**
MR RUBAN NALLATHAMBY
MR VELLAICHAMY S.
**6th June**
MRS VANITHA
**7th June**
MR JEYARAJ ISREL JOTHIPAUL
**8th June**
MISS DANITA PRAISLYN DANIEL
MRS ESTHER GEETHA
MISS JOHANNAH MIRACLIN
MR PAULDENISER SEKAR
**9th June**
MISS HALLIE REBECCA
MRS KAVITHA E.
**10th June**
MASTER NIXON BEN JOSE.N
**11th June**
MR ABRAHAM RAVIKUMAR S.
MRS GRACY NIRMAL D.
MISS Y EVANGELIN SWEETY
**13th June**
MR MESSIAH A.S.K
MRS SOFIA CHRISTY SOLOMON RAJKUMAR
**14th June**
MR SOLOMON S. SURESH
MRS SUBITHA MOHAN
**15th June**
MR BINO SHALIN
MR J.JOHNSON PRABU
MASTER JEHILE JOSEPH
MR S.JOHNSON
**16th June**
MRS A.JAINY JANET JENITTA
MASTER ABIL KIYOLIUS
MR JESUDASAN RAJIAH (Sonapoor-Selvam)
**17th June**
MR GNANA SEKAR P.
MISS JESSIE ANN
**19th June**
MR ABRAHAM JULE
**20th June**
MISS HELEN DIVINA DAVID
**21th June**
MRS KARTHIKA RAJAVEL
MR Micheal Robert Praveen
**23th June**
MR CHRISTOPHER ASIR DOSS S.
MR JEGAN RAJAN R.
MR R.JEGAN
MISS SHIMYRNA ABAIGAIL
**24th June**
MR VIJAYANAND MJ
**25th June**
MISS GRENA.A
**26th June**
MR SHYLANDER VASANTH KUMAR

**27th June**
MR GILBERT RAJ
MISS JERUSHA HEPZIBA J.
MR RAJAN.D
**28th June**
MISS A.RHODA PERSIS
MR SELVARAJ MURRAY
**29th June**
MRS ROSELIN SOBITHAM
**30th June**
MASTER KENNY MATTEO STANLY P.

## Wedding Anniversary

**2th June**
MR & MRS DANIEL J.S.
**5th June**
MR & MRS SATHISH RAJ KUMAR
**8th June**
MR & MRS JACOB MANI DURAI
**11th June**
MR & MRS NIRMAL JOSE M.
**15th June**
MR & MRS VIJAY BALAKRISHNAN ( ABU SHAGARA)
**18th June**
MR & MRS RAVI SELVAN K.
**21th June**
MR & MRS SAM RAJ JUDSON
**24th June**
MR & MRS DARWIN RAJAPANDIAN
**25th June**
MR & MRS J.JOHN BRIGHT SINGH
**27th June**
MR & MRS BEN CHELATHAI POVAS
**28th June**
MR & MRS J YESU RAJAN
MR & MRS MANGALRAJ

## DAILY BIBLE READING JUNE 2024

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 SAT | அப்போஸ்தலர்/ACTS 19:1-20 | அப்போஸ்தலர்/ACTS 19:21-40 |
| 02 SUN | சங்கீதம் /PSALMS 91 | சங்கீதம் /PSALMS 92 |
| 03 MON | அப்போஸ்தலர்/ACTS 20:1-38 | அப்போஸ்தலர்/ACTS 21:1-16 |
| 04 TUE | அப்போஸ்தலர்/ACTS 21:17-40 | அப்போஸ்தலர்/ACTS 22:1-30 |
| 05 WED | அப்போஸ்தலர்/ACTS 23:1-22 | அப்போஸ்தலர்/ACTS 23:23-35 |
| 06 THUR | அப்போஸ்தலர்/ACTS 24:1-27 | அப்போஸ்தலர்/ACTS 25:1-27 |
| 07 FRI | அப்போஸ்தலர்/ACTS 26:1-32 | அப்போஸ்தலர்/ACTS 27:1-44 |
| 08 SAT | அப்போஸ்தலர்/ACTS 28:1-16 | அப்போஸ்தலர்/ACTS 28;17-31 |
| 09 SUN | சங்கீதம் /PSALMS 93 | சங்கீதம் /PSALMS 94 |
| 10 MON | ரோமர் /ROMANS 1:1-32 | ரோமர்/ROMANS 2:1-29 |
| 11 TUE | ரோமர் /ROMANS 3:1-31 | ரோமர்/ROMANS 4:1-25 |
| 12 WED | ரோமர் /ROMANS 5:1-21 | ரோமர்/ROMANS 6:1-23 |
| 13 THUR | ரோமர் /ROMANS 7:1-25 | ரோமர்/ROMANS 8:1-39 |
| 14 FRI | ரோமர் /ROMANS 9:1-33 | ரோமர்/ROMANS 10:1-21 |
| 15 SAT | ரோமர் /ROMANS 11:1-36 | ரோமர்/ROMANS 12:1-21 |
| 16 SUN | சங்கீதம் /PSALMS 95 | சங்கீதம் /PSALMS 96 |
| 17 MON | ரோமர் /ROMANS 13:1-14 | ரோமர்/ROMANS 14:1-23 |
| 18 TUE | ரோமர் /ROMANS 15:1-33 | ரோமர்/ROMANS 16:1-27 |
| 19 WED | 1 கொரிந்தியர் /1CORINTHIANS 1:1-31 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 2:1-16 |
| 20 THUR | 1 கொரிந்தியர் /1CORINTHIANS 3;1-23 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 4:1-21 |
| 21 FRI | 1 கொரிந்தியர் /1CORINTHIANS 5:1-13 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 6:1-20 |
| 22 SAT | 1 கொரிந்தியர் /1CORINTHIANS 7:1-24 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS7:25-40 |
| 23 SUN | சங்கீதம் /PSALMS 97 | சங்கீதம் /PSALMS 98 |
| 24 MON | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 8:1-13 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 9:1-27 |
| 25 TUE | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 10:1-33 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS11:1-34 |
| 26 WED | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 12:1-31 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS13:1-13 |
| 27 THUR | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 14:1-39 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS15:1-34 |
| 28 FRI | 1 கொரிந்தியர்/1CORINTHIANS 15:35-58 | 1 கொரிந்தியர்/1CORINTHIANS16:1-23 |
| 29 SAT | 2 கொரிந்தியர் /2 CORINTHIANS 1:1-24 | 2 கொரிந்தியர்/2CORINTHIANS 2:1-17 |
| 30 SUN | சங்கீதம் /PSALMS 99 | சங்கீதம் /PSALMS 100 |

# ஆராதனை தியானப் பொருள்

## ஜீன் - 2024

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>June-2<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | 1 இராஜாக்கள் 3:16-28<br>யாக்கோபு 1:1-8<br>லூக்கா 10:21-24<br>சங்கீதம் 119:33-40 | அருட்பணியை<br>வெளிப்படுத்தும் கிறிஸ்துவின்<br>அழைப்பு<br>WISDOM FROM ABOVE |
| ஞாயிறு<br>June-9<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | நீதிமொழிகள் 8:22-31<br>வெளிப்படுத்தல் 21:1-8<br>லூக்கா 8:22-25<br>சங்கீதம் 19 | தூய ஆவியாரை எதிர்நோக்கிக்<br>காத்திருத்தல்<br>CREATION PROCLAIMS<br>GLORY OF GOD |
| ஞாயிறு<br>June-16<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 6:1-8<br>2 தெசலோ 2:13-17<br>யோவான் 4:15-26<br>சங்கீதம் 139 | வாரும் தூய ஆவியாரே,<br>எம்மைப் புத்தாக்கம்<br>செய்தருளும்<br>WORSHIP THE LORD IN<br>TRUTH AND SPIRIT |
| ஞாயிறு<br>June-23<br>2024 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | தானியேல் 6:11-23<br>2 கொரிந்தியர் 6:1-10<br>மாற்கு 10:35-45<br>சங்கீதம் 34 | நாம் மூவொரு கடவுளை<br>வழிபடுகிறோம்<br>COST OF DISCIPLESHIP |
| ஞாயிறு<br>June-30 | பழைய ஏற்பாடு<br>நிருப பாடம்<br>நற்செய்தி பாடம்<br>சங்கீதம் | ஏசாயா 49:1-7<br>எபேசியர் 5:1-5<br>மத்தேயு 5:13-16<br>சங்கீதம் 27 | நாம் மூவொரு கடவுளை<br>வழிபடுகிறோம்<br>PEOPLE OF GOD : SALT<br>AND LIGHT |